# வேள்பாரியில் ஏறுதழுவுதல்

# Bull Embracing in *Velbari*

**சு. மகாலட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர், இந்தியா

**S. Mahalakshmi**
*Research Scholar (Part-Time)*
*Department of Tamil*
*Kongunadu Arts and Science College*
*Coimbatore, India*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்று ஏறுதழுவுதல். நாகரீக மாற்றங்கள் மனிதர்களை பலவழிகளில் பண்படுத்தி முன்னேற்றம் உடையவர்களாக மாற்றி அமைத்தது. அவ்வகையில் மிகப் பெரிய மாற்றத்திற்கு வித்திட்டது காட்டு விலங்குகளை வீட்டு விலங்குகளாக மாற்றி அமைத்தது. அவ்வளவு எளிதாக அவ்விலங்குகளை வீட்டு விலங்குகளாக மாற்றி அமைத்திருக்க முடியாது. அதற்காக பல காலங்கள் பல இழப்புகளைச் சந்தித்திருக்க வேண்டும் தமிழினம். வீரத்தைப் பயன்படுத்தி இக்காட்டு விலங்குகளை அடக்கியவர்கள் நாளடைவில் வீட்டு விலங்குகளாய் அவை மாறிப்போன சூழ்நிலையிலும் அவற்றை அடக்குவதை தங்கள் மரபுவழி விளையாட்டுகளுள் ஒன்றாக மாற்றிக் கொண்டனர். மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் அடக்குவது அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதே ஏறுதழுவுதல் ஆகும். வேள்பாரியின் முப்பாட்டன் சூலிவேள் காட்டெருமையை அடக்கி திரையர் குலப்பெண்ணான தூதுவையை எவ்வாறு மணந்தான் என்பதை வேள்பாரி புதினம் வழி ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

## Abstract

*One of the cultural symbols of tamil society is "Eru Thazhuvuthal" (bull embracing). Civilizational transitions have refined human lifestyles, fostering progress. A significant aspect of this transformation was the domestication of wild animals, a process that was neither quick nor easy. The Tamil people likely endured many losses over time to achieve this. Those who tamed wild animals using their bravery eventually transformed them into domestic animals. Over time, this act of taming evolved into a traditional sport.*

*Eru Thazhuvuthal involves letting a bull run free and humans attempting to subdue it or hold onto its horns and bring it under control. This study aims to analyze the narrative from the Velpari, which recounts how Velpari's ancestor, Soolivel, tamed a wild buffalo and subsequently married Thoothuvai, a woman from the Tiraiyar clan.*

**Citation**

Mahalakshmi, S. "Bull Embracing in *Velbari*." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 77-82.

**வீரத்தின் சிறப்பு**

*தமிழகத்தின் மரபு வளங்களுக்குள் முக்கியமாகக் கருதப்படுவது வீரம். வீரம் தமிழர்களின் குருதியிலேயே ஊறிய ஒன்று. மயிர் நீட்பின் உயிர் வாழாக் கவரி போல வீரத்திற்காகத் தன் உயிரையும் நீட்பான் வீரத்தமிழன். இத்தகு சீர்மையும், சிறப்பும் வாய்ந்தது தமிழர்களின் வீரம். தமிழகத்தில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் வீரக்குழந்தையாகவே வளர்க்கப்படுகிறது. அக்குழந்தையின் தாயும் வீரத்தாயாகவே போற்றப்படுகிறாள்.*

***"புலி சேர்ந்து போகிய கல்அளை போல***
***ஈன்ற வயிறோ இதுவே***
***தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே" (2)***

***(புறம் பா.எ. 86)***

*உன் மகன் எங்குள்ளான் எனக் கேட்டவளுக்கு அவனைப் பெற்ற என் வயிறு புலி இருந்து விட்டுப்போன கல் குகையைப் போன்றது. அத்தகைய வீரம் பொருந்திய அவனைப் போர்க்களத்தில் தான் காணமுடியும் என வலிமைமிக்க புலிக்கு தன் மகனை ஒப்பிட்டு கூறுவதிலிருந்து தமிழர்கள் வீரத்திற்கும் எவ்வளவு முக்கியதுவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.*

**ஏறுதழுவுதல்**

*"வீறுடைய ஏறுகள் கடும் புலியையும் நேர் நின்று தாக்கும். வலிய கொம்புகளால் அதன் உடலைப் கீறிக்கொல்லும் இத்தன்மை வாய்ந்த எருதுகளைக் கொல்லேறு என்றும் மாக்காளை என்றும் தமிழ்நாட்டினர் போற்றுவர்" (3) என்ற கூற்றிலிருந்து புலியையே வீழ்த்தும் வலிமை உடையவை இவ்ஏறுகள் என்பதை தெளிவர உணர்ந்து கொள்ளலாம். இக்கொல்லேற்றை அடக்கும் ஆண்மகனையே பெண்கள் வீரனாக ஏற்றுக் கொள்வர்.*

***"கொல்லேற்றுக் கோடஞ்சுவாணை மறுமையும்***
***புல்லாளே ஆயமகள்" (4)***

***(கலி.முல்.பா. 103)***

*கொல்லும் தன்மையுடைய ஏற்றை அடக்க அஞ்சுபவனை இப்பிறவி மட்டுமல்ல. மறுபிறவியிலும் மணக்க விரும்ப மாட்டாள் ஆயமகள்.*

*ஆரம்ப காலகட்டத்தில் விலங்குகள் வசிக்கும் இயற்கைச் சூழலில் இவ்வேறு தழுவுதல் நிகழ்த்தப்பட்டு பின் காலச்சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது.*

**பெண்ணை மணக்கும் தகுதி**

*முல்லை நில ஆயர் மக்கள் தம்குடிப்பெண் பருவம் எய்திய போது தம்மிடமுள்ள ஓர் காளைப் கன்றினை அவள் பொருட்டு ஊட்டச்சத்தான உணவுகளைக் கொடுத்து வளர்ப்பார்கள். பெண் திருமண வயது வரவும் காளைப்பருவம் எய்திய நிலையிலும் அக்காளையை அடக்கும் வீரனுக்கே ஆயர் மகள் மணம் செய்விக்கப் பெறுவாள்.*

*அச்சமின்றி தனிஒருவனாக நின்று போராடி வெற்றி பெறுவதே பெண்ணை மணக்கும் முதல் தகுதியாகப் போற்றப்படுகிறது.*

***"பொருபுகல் நல்ஏறு கொள்பவர் அல்லால்***
***திருமா மெய் தீண்டலர்". (5)***

***(கலி.முல்.பா. 102)***

*பேர்க்குணமுடைய நல்ல ஏற்றினைத் தழுவி வெற்றி கொள்பவர் அல்லால் பிறர் இவளுடைய அழகிய கரிய மேனியைத் தீண்டத்தக்கவர் அல்லர்.*

*பொதுவாக காளையை அடக்குபவனை ஆயர் குலப் பெண்கள் மணப்பவர்கள் என்றாலும் காதல் கொண்ட ஆண்மகன் பெரும்பாலும் காளையினை அடக்க முன்வருவதும் அந்தப் பெண் எப்படியாவது தன் காதலன் வெற்றி பெற வேண்டுமென வேண்டுவதையும் காணலாம்.*

**அனைவரும் ஒன்று கூடுதல்**

*காட்டெருமையை அடக்கி ஒருவன் பொண்ணை மணக்க வேண்டும் என்று உறுதிபூண்ட நிலையில் ஒருபோதும் பின் வாங்க மாட்டான். அவன் காட்டெருமையினை அடக்கும் காட்சி யைக் காண ஊரே திரண்டிருந்தது.*

*“ஊரோடு சேர்ந்து அவனும் காட்டின் உட்சிப் பகுதிக்குச் சென்றான். எல்லோரும் முகட்டின் மேல் இருந்த பாறையில் ஏறி உட்கார்தனர்”. (வே.பா.பா.1 ப.322) எவ்வித இடையூறும் தங்களால் வீரனுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும் அவனின் வீரத்தை கண்ணாரக் காண வேண்டும் என்ற ஆவலும் அனைவரின் முகங்களிலும் கண்கூடாகத் தெரிகிறது.*

**காட்டெருமையின் தோற்றம்**

*“இருமலைகள் சரிந்து இணையும் பகுதி. நடுவில் நீர் சிறிது ஓடிக் கொண்டிருந்தது. அதில் தண்ணீர் குடிக்க வரும் என்று ஓடைக்கரையில் வீர இளைஞன் காத்திருந்தான். நீண்ட நேரத்திற்குப் பிறகு காட்டெருமை ஒன்று ஓடை நோக்கி வந்து கொண்டிருந்தது”.*

*“அந்தக் காட்டெருமையின் உயரம் மலை முகட்டிலிருந்து பார்க்கும் போதே அச்சம் தருவதாக இருந்தது. திருகி இருக்கும் அதன் கொம்புகள் யானையைக் குத்தி சாய்க்கக் கூடியது. அதன் முன் நெற்றி பாறையை நொறுக்கக் கூடியன” (வே.பா.பா.1 ப.322) என்பதிலிருந்து அக்காட்டெருமையின் தோற்றம் அச்சமூட்டக் கூடியதாய் உள்ளது என்பதும் இத்தகு வலிமையான விலங்கினத்தை வீரன் ஒருவன் தனியே அடக்கினான் என்பதும் வீரத்தின் விளை நிலமாக தமிழ் மண்ணுக்கும் பெருமை அளிக்கும் செயல் என்பதில் ஐயமில்லை.*

**காட்டெருமையை வீழ்த்துதல்**

***“மணிவரை மருங்கின் அருவிபோல***
***அணிவரம்பு அறுத்து வெண்காற்காரியும்***
***மீன்பூத்து அவிர் வரும் அந்திவான் விசும்பு போல்***
***வான்வாரி பரந்த புள்ளி வெள்ளையும் ..***
***கொடி நறைசூழ்ந்த தொழூஉ” (6)***

***(கலி.முல்.பா. 103)***

*என்பதிலிருந்து பல தோற்றம் உடைய காளைகளை வரிசையாக தொழுவத்திற்குள் விட்டனர். வீரர்கள் அக்காளைகளை அடக்கினர் என்கிறது கலித்தொகை. இதுவே பலகாலமாக கடைபிடிக்கப்படும் மரபு. ஆனால் இக்காட்டெருமையனை அடக்கும் வீரனின் வழிமுறை வேறுபட்டது.*

*“எந்த ஆயுதமும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் தனி ஒருவனாகக் காட்டெருமையை வீழ்த்தி மலை முகட்டில் இருக்கும் வெற்றி இலையைப் பறித்து மந்தைக்கு வந்து சேரும் வீரனைத் தான் திரையர் குலப்பெண் ஏற்றுக் கொள்வாள். இல்லையென்றால் எந்தப் பெண்ணும் அவனை ஏற்கமாட்டாள்” (வே.பா.பா.1ப.318) என்பதை ஆணித்தரமாகக் கூறுகிறார் ஆசிரியர் வெங்கடேசன்.*

*இயல்பாக நீரருந்த வரும் காட்டெருமையின் வழியில் குறுக்கிட்டு அதன் கோபத்தை தூண்டி தன்னை துரத்துமாறு செய்து போக்குக் காட்டி அவ்வெருமையனை களைப்படையச் செய்து பின்னே அதனை வீழ்த்துகின்றான்.*

*"அதன் பாதையில் குறுக்கிட்ட இளைஞன் ஏதோ ஒன்று செய்து அதை சீண்டினான். அது அவனை விரட்டத் தொடங்கியது. நீரோடையைத் தாண்டி மலையின் எதிர்ப்புறம் ஓடத் தொடங்கினான். அது நான்கு கால் பாய்ச்சலில் வீறு கொண்டது. அவன் மலைப்புதருக்குள் படுவேகமாக மேலேறினான். காட்டெருமையின் ஓட்டத்தை விட அவனுடைய ஓட்டத்தின் வேகம் கூடுதலாக இருந்தது. அது காட்டெருமையை மேலும் வேகப்படுத்தியது".*

*"வேகமாக மேலே ஏறிக் கொண்டிருந்தவன் சட்டென ஓரிடத்தில் வளைவு கொண்டு கீழ்நோக்கித் திரும்பி சரசரவென ஓடையை நோக்கி இறங்கினான். காட்டெருமையின் ஆத்திரம் இன்னும் அதிகமானது. இரண்டாவது முறை குதித்துப் பெரும் புதரைத் தாண்டி அவன் முதுகுக்கு நேராக அதன் தலை இறங்கிக் கொண்டிருந்தது." (வே.பா.பா.I.ப.322)*

*"மிக வேகமாக முன்னால் வந்து ஓடையைத் தாண்டி எதிர்ப்புற மலையின் மீது ஏறினான். அதன் மூச்சில் அனல்காற்று சீறியது. கொம்புகளில் அடிபட்டு குறுமரங்கள் முறிந்து கொண்டிருந்தன. அவன் மின்னல் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தான். ஓடுபவன் மேலும் கீழுமாக மூன்று முறை ஓடையைக் கடந்து ஓடினான். காட்டெருமையும் வெறி கொண்டு ஓடியது. அவனைத் தாக்கப் போகும் கணமும் மிக மிக அருகில் இருந்தன".*

***"ஏதோ ஒரு மரத்தின் கிளையைப் பிடித்துப் போக்குக் காட்டி ஒரு சுற்று சுற்றினான்"***

***(வே.பா.பா.I.ப. 323)***

*காளையின் கொம்பைப் பிடித்து நேருக்கு நேராக நின்று அடக்குவதைப் போல காட்டெருமையினை அடக்க இயலாது. வீட்டுவிலங்குகளாகப் பழக்கப்பட்ட விலங்குகளின் வலிமையை விட மூன்று மடங்கு வலிமை உடையது காட்டு விலங்கு. அதனை அடக்க வீரமும் விவேகமும் வேண்டும்.*

*".. காட்டெருமையின் பின்னங்கால் குளம்பின் பின்புறம் சிறுதசை ஒன்று வளர்ந்திருக்கும் சரியாக அந்தத் தசையை அடித்து விட்டால் அதன் பின்னங்கால் நரம்புகள் இழுத்துக் கொள்ளும் அதனால் காலை நகர்த்த முடியாது. இருந்த இடத்தில் இருந்துதான் போராடும். அதன் பிறகு அதை ஆயுதம் கொண்டு வீழ்த்தி விடலாம்". (வே.பா.பா.I.ப.326)*

*இதை முன்னோர் வழி அறிந்த அவ்வீரனும் அவ்வாறே செய்ய நின்ற இடத்தில் இருந்தே அக்காட்டெருமையும் போராடத் தொடங்கியது. "காளையின் கொம்பைப் பிடித்தல் ஆண்மை. வாலைப்பிடித்தல் தாழ்மை"(7) என்ற கூற்றுக்கு இணங்க,*

*இரண்டு ஆயுதங்களையும் கைகளில் ஏந்தத் தொடங்கினான். ஒரே இடத்தில் நின்றபடி அது அவனை நெருங்கவிடாமல் குத்தத் தலைப்பட்டது. அவன் விலகி விலகிச் சரியான வேளைக்காக காத்திருந்தான். காட்டெருமையினை முழுமையாக வீழ்த்தினான்." (வே.பா.பா.I.ப. 323)*

**மண நிகழ்வு**

*காளையை அடக்கிய வீரன் மாலைக்குள் ஊர் மந்தையில் வெற்றி இலையை (வெற்றிலை) வைத்து மணமுடிக்க வேண்டும். பொழுது சாய்வதற்குள் ஊர்மந்தைக்கு வந்து அவன் வெற்றி இலையை வைத்தான். ஊர் பெரியவர்கள் என்னவென்று கேட்டார்கள். அவனுக்குரியவளைச் சொன்னான். அவளும் வெற்றி இலையோடு மேலேறினாள். ஊர் வட்டியில் இருவரும் வெற்றி இலையை மாற்றி எடுத்துக் கொண்டனர். காட்டெருமையின் ஊன் தயாரானது. கொண்டாட்டம் தொடங்கி இரவு முழுதும் நீண்டது.*

*பல்லாயிரம் ஆண்டுகாலமாக தமிழர்களின் வீரத்தின் ஒரு அங்கமாக இருந்து வந்திருக்கிறது ஏறு தழுவுதல் எனில் அது மிகையாகாது. ஆரம்ப காலகட்டத்தில் இவ்விளையாட்டுக்கென ஒரு இடமோ பங்கு கொள்ளும் காளைகள் இனமோ பட்டியல் இடப்படவில்லை. அவ்விலங்குகள் வாழும் இயற்கைச் சூழலில் அதன் இடத்திற்கே சென்று ஏறுதழுவுதல் என்னும் வீர விளையாட்டினை நிகழ்த்தினான். பின் அக்காட்டு விலங்குகளை படிப்படியாக தன் கட்டுக்குள் கொண்டு வந்து பழக்கப்படுத்தியதன் விளைவாக அவை இயல்பு நிலை குன்றி வீட்டு விலங்குகளாய் மாறிப்போயின என்றாலும் அதன் இயற்கைக் குணம் சிறிதளவேனும் இருக்கும். அதைப் பயன்படுத்தி செயற்கைச் சூழலில் இவ்வீர விளையாட்டினை நிகழ்த்தினான். காலமாறுதலினால் இவ்விளையாட்டு அழியக்கூடாது என்று கருதியவன் மஞ்சிவிரட்டு, சல்லிக்கட்டு, மாடுபிடி என்ற பெயர்களில் பொங்கல் பண்டிகையின் போது மாட்டுப் பொங்கலன்று இவ்வேறுதழுவுதலை ஒரு விழாவாக நடத்திக் கொண்டிருக்கிறான். மாட்டை அடக்கியவர்களுக்கு பெண்ணை திருமணம் செய்தல் என்ற வழக்கம் மாறி மாடு பிடி வீரனுக்கு பரிசுகள் வழங்குவது என்ற வழக்கமானது தற்போது கடைபிடிக்கப்பட்டு வருகிறது.*

**அடிக்குறிப்புகள்**

1. *புறப்பொருள் வெண்பாமாலை - பா.எண். 46*
2. *புறநானூறு - பா.எண். 86*
3. *சேதுப்பிள்ளை .ரா.பி - தமிழர்வீரம் - ப.எண். 81*
4. *கலித்தொகை - பா.எண். 103*
5. *கலித்தொகை - பா.எண். 102*
6. *கலித்தொகை - பா.எண். 103*
7. *சேதுப்பிள்ளை .ரா.பி - தமிழர்வீரம் - ப.எண். 82*

**முதன்மைச்சான்றாதாரம்**

*வெங்கடேசன் .சு - வீரயுகநாயகன் வேள்பாரி (பாகம் -1), விகடன் பிரசுரம், சென்னை 2019*

**துணைமைச்சான்றாதாரம்**

*சேதுப்பிள்ளை .ரா.பி - தமிழர் வீரம் பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 2007.*

*திருஞானசம்பந்தம்.ச (உ.ஆ) - புறப்பொருள் வெண்பாமாலை, கதிர் பதிப்பகம், திருவையாறு 2020*

*புலியூர்க்கேசிகன் (உ.ஆ), புறநானூறு பாரி நிலையம். சென்னை 2004*

*விசுவநாதன் (உ.ஆ), கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், சென்னை 2017*

## References

1. Parappamalai Venpamalai, P.No. 46
2. Purananuru, P.No. 86
3. Sethupillai .Ra.P, Tamilarveeram, P.No. 81
4. Kalithoaki, P.No. 103
5. Kalithoaki, P.No. 102
6. Kalithoaki, P.No. 103
7. Sethupillai .Ra.P, Tamilarveeram, P.No. 82

8. Venkatesan .Su, Veerayuganayagan Velpari, (Part-1), Vikatan Prasuram, Chennai, 2019
9. Sethuppillai .Ra.P, Tamil Veerama,; Palaniappa Brothers, Chennai, 2007
10. Thirugnanasambandham .Sa(U.A), Parappamaru Venpamalai, Kathir Publishing House, Thiruvaiyaru, 2020
11. Puliyurkesigan (U.A), Purananoor, Pari Nilayam, Chennai, 2004
12. Viswanathan (U.A), Kalithoki, New Century Book House(P)Lit, Chennai, 2017